**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 35/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 3 |
| Name | : | சத்தியபாமா, வயது 50 |
| Father Name/Husband Name | : | ரங்கசாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of August 2026.

**(A1, A2 absent. 355 BNSS petition filed and allowed).**

<u>**முதல் விசாரணை**</u>

1 நான் தற்போது கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். உதவி ஆய்வாளர் காயத்ரி மற்றும் ஆய்வாளர் பிரேம◌ா அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 05.11.2025 ஆம் தேதி 18.00 மணிக்கு மேற்படி உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது வாதி முனீஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.40/2025 4 of TNPHW Act ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **(அந்த புகார்மனு அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2 அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை மேற்படி ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தார். மேற்படி வழக்கை மேற்படி ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 05.11.2025 ஆம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்த்திக் ராஜா

மற்றும் சிவா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3 பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார். பின்பு எதிரியை 11.11.2025 அன்று கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் விசாரணையை முடித்து எதிரி மீது 11.11.2025 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

5.நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் புகார்தாரர் புகார் கொடுத்ததாகவும் சொல்வதும் அதனை பெற்று நிலைய காவலர் வழக்கு பதிவு செய்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6. சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததாக சொல்வதும் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

7.வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.